1971 ஜூலை 21]

நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம்

* 357 வின—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரிலிருந்து அவனுசி செல்லும் பாதையில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுது பட்டிருப்பதால் அதை புதுப்பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னார்கள். அந்தப் பாதை 22 அடி அகலம் உள்ள பாதையாக இருக்கிறது. பாலம் 12 அடி அகலம் இருக்கும் காரணத்தால் அடிக்கடி விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பாலத்தைப் புதுப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும் அளவுக்கு நிலைமை இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில மராமத்துகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மதுரை நகரில் கட்டப்படும் மேம்பாலங்கள்

* 358 வின—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரில் கட்டப்படும் இரண்டு மேம்பாலங்களின் வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் மைல் 300/2-ல் சுப்ரமணியபுரத்திற்கு அருகில் உள்ள மேம்பாலத்தின் பணி, 1972 பிப்ரவரியில் முடியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல், மைல் 300/7-ல் மீனுட்சி மில்லுக்கு அருகில் அமைக்கப்போகும் மேம்பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள், அண்மையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இப் பணியும் ஒப்பந்தக்காரரிடம் இடத்தை ஒப்புவித்த தேதியிலிருந்து 18 மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. திருப்பதி : சுப்பிரமணியபுரம் கேட்டுக்கு அருகே இருக்கும் பாலம் அமைக்கும் வேலை வேகமாக நடைபெறுகிறது. மீனுட்சி மில் அருகே கட்டப்படும் பாலம் வேலை துவங்காமல் இருக்கிறது. அதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிட்ட காரணம் ஒன்றும் இல்லை. மீனுட்சி மில் அருகே இடம் இப்போது தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இடத்தை ஒப்படைத்து 18 மாதத்தில் தொடங்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மேம்பாலம் கட்டப்படாமல் இருக்கும் காரணத்தால் ஒன் வே டிராபிக் என்று வைத்து அதனல் பெரிய சிரமங்கள் இருக்கும் காரணத்தால் மூன்று மாத காலத்திற்குள்ளாக மேம்பாலத்தைக் கட்டுவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 25 ஆண்டுகளுக்குப் பிறகு மேம்பால வேலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்குள் வேலையைத் துவங்க முடியாது. வேலைகளைத் துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Age-limit for Government appointments

* 338. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to enhance the age-limit for Government appointment from 25 years to 30 years in Tamil Nadu Government Service; and

(b) if so, when it will be implemented ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (ஆ) இது குறித்துப் பெறப்பட்ட முறையீடு ஒன்று ஆய்வில் உள்ளது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister in his reply stated that investigations are going on with regard to this. May I know the terms of reference that he has allotted for this and on what basis the Hon. Chief Minister has asked them to investigate the whole matter? May I know all the details concerned about it ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வேலை தேடுவோர் கழகம் என்ற கழகத்தின் சார்பில் 19—4—1971-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதிலே அரசுப் பணிகளிலே சேர்பவர்களுக்கு உயர்ந்தபட்ச வயது 25 என்று இருப்பதை 30 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முறையீடு செய்தார்கள். அதைப் பற்றி ஆராய்வதற்காக பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கருத்துக்காக அரசு காத்திருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : அரசு ஊழியர்களும் மற்றத் துறைகளில் இருக்கக்கூடிய ஊழியர்களும் ஓய்வு பெறும் வயது வேறு வேறு விதமாக 55, 58, 60 என்ற வகையில் இருக்கிறது. இவைகளை எல்லாம் மாற்றி ஒரே சீராக 55 என்று குறிப்பிட அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த லட்சியத்தை நோக்கித்தான் அரசு பல காரியங்களை இப்போது எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறது.